පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංකය:79
ආයතනයේ නම : ජනමාධ්‍ය අමාත්‍යංශය

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු ආයතනය භාර අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

பாராளுமன்ற வெளியீட்டிலக்கம் - 79
நிறுவனத்தின் பெயர் : வெகுசன ஊடக அமைச்சு

பாராளுமன்ற அரசாங்க கணக்குக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பில் நிலையியற் கட்டளை இலக்கம் 119 (4) கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்பு மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பாராளுமன்றத்திற்கு முன்வைத்தல்.

Parliamentary Series No.79
Name of the Institution : Ministry of Mass Media

Submission of observations of the Hon. Minister in charge of the institution and steps taken with regard to the reports tabled by The Committee on Public Account in terms of Standing Ordrer No 119(4)

படிவம் (இலக்கம் 01)

பாராளுமன்ற வெளியீட்டு இலக்கம் -79

வெகுசன ஊடக அமைச்சு

முதலாம் பகுதி : 81.00		
தொ.இல	குழுவினால் அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகள்	குறைபாடுகளை சரிசெய்வதற்கு நிறுவனத்தினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்
1.	அபாயப் பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவராமை.	2022 ஆம் ஆண்டுக்குரிய அபாயப் பதிவேடு தயாரிக்கப்படவில்லை. ஆயினும், தற்போது 2023 மற்றும் 2024 ஆண்டுகளுக்கு ஏற்புடைய அபாயப் பதிவேடுகள் தயாரிக்கப்பட்டு இற்றைப்படுத்தி பேணப்படுகின்றன.
2.	கணக்காய்வாளர் நாயகத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அனைத்து கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் ஒரு மாதத்திற்குள் பதில் அளிக்கப்படவில்லை.	கணக்காய்வு ஐய வினாக்களுக்கு அமைச்சின் பல்வேறு பிரிவுகளிலிருந்து தகவல்களைத் திரட்டி இறுதி பதிலை தயாரிக்கும் போது குறிப்பிட்ட கால தாமதம் ஏற்படுகின்றது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் இடைக்கால பதிலொன்றை அனுப்புவதற்கு இதன் பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும்.
3.	மீளாய்வுக்குரிய வருடத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள் உரிய முறையில் நடத்தப்படவில்லை.	கொவிட் - 19 பெருந்தொற்று காரணமாக உத்தியோகத்தர்கள் சேவை முறைக்கு அமைய சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகைத்தந்த காரணத்தினால் 2022 ஆம் ஆண்டுக்குரிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் 2022 வருடத்தின் முதலாவது மற்றும் இரண்டாவது காலாண்டுக்கு ஒரு கூட்டமும் மூன்றாம் காலாண்டில் ஒரு கூட்டமும் நான்காம் காலாண்டில் ஒரு கூட்டமும் என்ற வகையில் நான்கு தவணைகளையும் உள்ளடக்கி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.
4.	2028.08.28 ஆம் திகதிய இல. 01/2020 அரச நிதிச் சுற்றறிக்கையின் 1 ஆம் பகுதியில் 11.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள காலப் பிரிவுக்குள் நி.ஓ. 756(6) பிரகாரம் பொருள் சுற்றாய்வை மேற்கொண்டு உரிய திகதிற்கு ஏற்புடைய அறிக்கைகளை கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்படவில்லை. வருடாந்த பொருள் சுற்றாய்வில் கண்டறியப்பட்ட மிகை மற்றும் குறைபாடுகள் தொடர்பிலான பரிந்துரைகள் மற்றும் ஏனைய பரிந்துரைகளை உரிய காலத்திற்குள் நடைமுறைப்படுத்தாமை.	உரிய காலப்பகுதிக்குள் பொருள் சுற்றாய்வை நடாத்தி கணக்காய்வாளரிடம் அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.
5.	அனைத்து வாகனங்களிலும் அரச இலச்சினைப் பொறிக்கப்படவில்லை.	அனைத்து வாகனங்களிலும் அரச இலச்சினைப் பொறிக்கப்பட்டுள்ளது.
6.	அனைத்து வாகனங்களுக்கும் லொக் புத்தகம் இற்றைப்படுத்தி பேணப்படவில்லை.	அனைத்து வாகனங்களுக்கும் லொக் புத்தகம் இற்றைப்படுத்தி பேணப்படுகின்றது.
7.	நி.ஓ.94(1) பிரகாரம் செலவினத் தலைப்புக்கு ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளைப் பயன்படுத்திய பின்னர் வருடத்தின் இறுதியில்	பொறுப்புக்களை ஏற்கும் போது வருடத்தின் இறுதியில் எஞ்சிய ஒதுக்கீட்டை மீளாய்வு செய்து அதற்கமைய, நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பது தொடர்பில்

V.P.K. Anusha Palpita
Secretary
Ministry of Mass Media
Asidisi Medura", Kirulapona Mawatha,
Polhengoda, Colombo

	எஞ்சிய ஒதுக்கீடுகளின் எல்லையைத் தாண்டி பொறுப்புக்களை ஏற்றிருத்தல்.	உத்தியோகத்தர்களுக்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
8.	ஒரு வருடத்திற்கும் மேற்பட்ட கடன் நிலுவைகள் காணப்பட்டன.	ஒரு வருடத்திற்கும் மேற்பட்ட கடன் நிலுவைகள் அனைத்தும் தர்போது தீர்க்கப்பட்டுள்ளன.
9.	நி.ஒ. 371 பிரகாரம் வழங்கப்பட்ட நிமித்த உப கட்டுநிதி முடிவடைந்து ஒரு மாதத்திற்குள் தீர்க்கப்படவில்லை.	நிமித்த உப கட்டுநிதி முடிவடைந்து ஒரு மாதத்திற்குள் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் பகுதி : 83.50		
தொ.இல	குழுவினால் அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகள்	குறைபாடுகளை சரிசெய்வதற்கு நிறுவனத்தினால் எடுக்கப்புட்டுள்ள நடவடிக்கைகள்
1.	மொத்த ஆளணியையும் உள்ளடக்கிய வகையில் செயலாற்றுகை ஒப்பந்தங்கள் செய்யப்படவில்லை.	மொத்த ஆளணியையும் உள்ளடக்கிய வகையில் செயலாற்றுகை ஒப்பந்தங்களை தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்படுகின்றது.
2.	திட்டமிடப்பட்ட பயிற்சி சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புக்கள் 50% க்கும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.	2022 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் பயிற்சிகள் இணைய வழியிலேயே நடாத்தப்பட்டன. எனவே, பாடநெறிகளுக்கு உத்தியோகத்தர்கள் பெயரிடப்பட்ட போதிலும் பௌதீக ரீதியில் நடாத்தப்பட்ட பாடநெறிகளில் உத்தியோகத்தர்கள் கலந்துகொள்வதற்கு நாட்டம் கொண்டிருக்கவில்லை.
3.	நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயம் கீழ் மட்டத்தில் / மறுக்கும் மட்டத்தில் / பாதிப்பான மட்டத்தில் காணப்பட்டது.	2022 ஆம் ஆண்டுக்கு வழங்கப்பட்டிருப்பது முனைப்பழியுள்ள அபிப்பிராயமாகும். கணக்காய்வின் போது சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை சரிசெய்து எதிர்காலத்தில் உண்மையான மற்றும் நியாயமான அபிப்பிராயமொன்றைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

V.P.K. Anusha Palpita
Secretary
Ministry of Mass Media
163, "Asidisi Medura", Kirulapona Mawatha,
Polhengoda, Colombo 05